**DEPOSITION OF WITNESS**

**In the court of Sub Court, Eraniel**

**S.C.No. 439/2023**

**Prosecution Witness – PW 5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.நாகராஜன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.09.2025.

(Accused A1 and A3 are Present). A4 absent **Petition U/s.355 BNSS** is filed and allowed).

முதல் விசாரணை–

நான் வில்லுகுறி சடையப்பர் குழியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி சந்திர சேகரரை எனக்கு தெரியும். என்னை யாரும் விசாரிக்கவில்லை. வழக்கு விபரம் எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது, அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ–5 ஆகும். அந்த கையொப்பம் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போட்டுக் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 16.06.2018 தேதி மதியம் 12 மணிக்கு நானும் சந்திரசேகரும் வில்லுகுறி பாலம் அருகில் நின்றுகொண்டிருக்கும்போது, இரணியல் காவல் ஆய்வாளர் குற்ற எண்.282/2018 பிரிவுகள் 294 பி, 307, 506(2) இதச மற்றும் 3 of TNPPDL Act வழக்கு சம்பந்தமாக என்னிடம் விளக்கி கூறி சம்பவ இடத்தையும்

அதன் சுற்றுபுறங்களையும் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள் என்றும், மேலும் சம்பவ இடத்தில் இருந்த TN 75 T 5377 Bajaj discover இருசக்கர வாகனத்தை கைபற்றி அத்தாட்சியில் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சுமூகமான நிலையில் இருப்பதினால் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**